# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

**2009 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*.]

*ச.வ.கூட். 10/2007*

**கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

*"கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக் கப்பட்டுள்ளதாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்க ளுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1***. *இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்க, கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

***2***. *இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனராம விஹாரஸ்தான செயற் பாட்டுச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல் லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "கொட்டாவ ஸ்ரீ புண்ணியா பிவர்தனராம விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம்" என்ற*

2-PL 004151-990 (2008/08)

பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) தேவாலயத்தில் பாதுகாப்புபையும் பராமரிப்பையும் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துதல் ;

(ஆ) வதிவுள்ள பிக்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதலும், அவர்களின் தேவைகளை நிறைவுசெய்தலும் ;

(இ) தேவாலயத்தின் மத, சமூக மற்றும் பொருளாதார அம்சங்களின் ஊக்குவிப்பை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளுக்கு உதவிபுரிதல் ;

(ஈ) பௌத்த தர்மத்தின் உறுதிப்பாட்டிற்கான நடவடிக்கையை எடுக்கும் அதேவேளை, பௌத்த ஒழுக்கநெறி விழுமியங்களின் அடிப்படையில் சங்கமொன்றைத் தாபிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுதலும் ஐந்து நல்லொழுக்கப் போதனைகளை அனுசரித்தலும்;

(உ) பௌத்த தேவாலயம் ஒன்றிடமிருந்து எதிர்பார்க்கப்படும் எல்லாக் குறிக்கோள்களையும் எய்துவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(ஊ) பௌத்தர்களிடையே ஆதரவற்றவர்கள், ஊனமுற்றோர், வயோதிபர், பிணியாளர், இடம்பெயர்ந்த ஆட்கள் ஆகியோரின் நலன்பேணலுக்கும் பயிற்சிக்கும் புனர்வாழ்வுக்குமான நிறுவனங்களைத் தாபித்தலும் பேணுதலும் ;

(எ) பௌத்த மதம் தொடர்பிலான நூல்கள், மஞ்சரிகள், சஞ்சிகைகள் மற்றும் வேறு இலக்கியம் என்பவற்றை வெளியிடுதலும் அல்லது வெளியிடச் செய்வித்தலும் நூலகங்கள், புத்தகக்கடைகள், அச்சுக்கூடங்கள் என்பவற்றைத் தாபித்தலும் பேணுதலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய விஹாரையின் பிரதம குருவாக இருக்க வேண்டியவரான தலைவர், உபதலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோரையும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்கத் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஐந்து குழு உறுப்பினர் களையும் கொண்ட முகாமைச்சபையொன்றினால் நிர்வகிக்கப் படுதல் வேண்டும்.

(2) முதலாவது சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவிவகித்த சங்கத்தின் முகாமைச்சபை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற் றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவா றான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் விடயங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறை வேற்றுவதற்குமான தத்துவங்களை உடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது எடுத்தல் அல்லது வாடகைக்குக் கொடுத்தல் அல்லது எடுத்தல், ஈடுவைத் தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பாரா தீனப்படுத்தல், பாரபந்தத்திற்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது நிறுவனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர் மூலமோ செய்து கொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும், ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் தகுதியென எண்ணக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தை கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவி நீக்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குகளைக் கொண்டு உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் பதவி விலகுதல், அவர்களைப் பதவி விலக்கல், பதவிதாங்குநர்களைத் தெரிவு செய்தல் சபையின் அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், சபையில் உள்ள ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏற்பாடுசெய்யும் விதிகள் உட்பட

அதன் குறிக்கோள்களை எய்துதல் என்பவற்றிற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இராத சட்டங்களைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப் போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் கொடைகள், மரணசாதன ஆதனக் கையளிப்பு, கைமாற்றம், நன்கொடைகள், உதவுதொகைகள், ஒப்பப்பணங்கள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் அல்லது ஏதேனும் நிதிசார்ந்த முதலீடு என்ற வகையில் இதற்கு முன்னர் அல்லது இதன்பின்னர் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகிய நோக்கத்திற்கு பெறுமானத் தேய்வு நிதியம், ஒதுக்கம் அல்லது மதிப்பிறக்க நிதியம் எதனையும் தாபிக்கலாம்.

(3) கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கையிலும் புரிகையிலும் அதனால் உறப்படும் எல்லாச் செலவுகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,-

(i) இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவருமான ஆள் ஒருவர் எனப் பொருளாகும் ;

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினை செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரினதும் செயலாளரினதும் அல்லது சபையினால் முறையே அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலுமாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியொருவராக எவரேனுமாள் கையொப்பமிடுவதினின்று தனிவேறானதாதல் வேண்டும்.

*சங்கத்தினால் செலுத்தப்பட வுள்ள தனிசுகளும் சங்கத்திற்குச் செலுத்தப்படவுள்ள தனிசுகளும்.*

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாக உள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றது மான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**11.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, கொடுத்து மாற்றல், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையாக அதற்குரித்தாக்கப் படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும், கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனம் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**12.** கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்டதன்பின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதினின்று அதன் அல்லது அவற்றின் விதிகளால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான ஏதேனும் வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள், கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்துக்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*